ISSN 2792 - 1050

# வெண்ணிலா

கவிதை மஞ்சரி.

VENNILA - Poetry Inflorescence.




இதழ்: 03 - ஒக்டோபர் 2021.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலா
கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence

இதழ்: 03 - ஒக்டோபர் 2021.

ஆசிரியர்: கவிஞர் எஸ் ஏ கப்பார்.
முகவரி: 378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314,
இலங்கை.

மின்னஞ்சல்: kavignarsagaffar@gmail.com
தொடர்பு: 07 5858 5656 / 076 5450 928.
வட்ஸ்அப்: 077 6968671.

ISSN 2792 - 1050

# நந்தினி சேவியர்.

சிறுகதைத் துறையிலேயே நன்கு அறியப்பட்ட கலாபூஷணம் நந்தினி சேவியர் அவர்கள் கவிதை, நாவல், பத்தி, விமர்சனக் கட்டுரை ஆகிய துறைகளிலும் தமது ஆளுமையைச் செலுத்திய ஈழத்துப் படைப்பாளிகளில் மிக முக்கியமானவர். இவருடைய பத்தி எழுத்துக்கள் மற்றும் கட்டுரைகள் சில வ. தேவசகாயம், தாவீது கிறிஸ்ரோ ஆகிய பெயர்களிலும் வெளிவந்துள்ளன. நாவல்கள், குறு நாவல்கள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் ஆகியவற்றை எழுதியிருந்தாலும் அவை இன்னமும் நூல் வடிவம் பெறவில்லை என்பது வருந்தத்தக்கது. இலக்கியச் செயற்பாடுகளுடன் சமூகச் செயற்பாடுகளிலும் முன்நின்று உழைத்த இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச்சார்பு) வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர்.

"நந்தினி சேவியர் சிறுகதைகள்" என்ற முருகையனின் கட்டுரை 2012 ஆம் ஆண்டிலிருந்து தரம் 10 தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதைத் தொகுதி (1993) சுதந்திர இலக்கிய விருது மற்றும் தமிழின்பக் கண்காட்சி விருது என்பவற்றை 1994 இலும் "நெல்லிமரப் பள்ளிக்கூடம்" சிறுகதைத் தொகுதி (2011) கொடகே தேசிய சாகித்திய விருது, அரச இலக்கிய விருது, வட மாகாண சிறந்த நூலிற்கான விருது என்பவற்றை 2012 இலும் பெற்றுக்கொண்டன. 2019ல் வெளிவந்த "பிடித்த சிறுகதை" - முகநூலில் பிடித்த ஈழத்துச் சிறுகதைகளைப் பற்றி எழுதிய குறிப்புகள் - முதலாம் தொகுதி வேறு சில எழுத்தாளர்களின் விமர்சனங்களுக்கு உட்பட்டமை தனக்குப் பெரும் மனவுளைச்சலை ஏற்படுத்தியதாகக் கூறியிருந்தார்.

அன்னாரது இழப்பு தமிழிலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடைய நாமும் பிராத்திப்போம்.



(25-05-1949 – 16-09-2021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணிப்பாளர் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்கள்.



(01-04-1940 – 26-12-2020)

26-12-2020 மதியம் மணிப் புலவரின் மரணச் செய்தி கேட்டு இலக்கிய உலகு ஆறாத் துயர்கொண்டது.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலான தனது எழுத்து வல்லமையினாலும், சிரித்த முகபாவத்தினாலும், தனக்கே உரித்தான ஆடை அலங்காரத்தினாலும் எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பிடித்த மனித நேயமிக்க மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்கள் தனது 80வது வயதில் இறையடி சேர்ந்துவிட்டார்கள். அன்னாரது ஆத்மா சாந்தியடைய வல்ல நாயனைப் பிராத்திப்போம்.

மணிப்புலவரவர்கள்,

• 1953ம் ஆண்டு ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது மேடையேறி தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தவர்.

• 1957ல் ஆசிரிய நியமனம் பெற்று தலைநகர் கொழும்பு சென்றது அவரது இலக்கிய வளர்ச்சிக்கு பேருதவியாக அமைந்தது.

• 1959ல் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதற் பரிசு பெற்றார். அதே ஆண்டு ஏப்ரல் மாதம் சுதந்திரன் பத்திரிகை நடாத்திய ஈற்றடி வெண்பா போட்டியில் ஆறுதல் பரிசும் பெற்றார்.

அந்த வெண்பா:

**காக்கை கறுப்பி**<br>
**கரு நீல மையழகி**<br>
**ஆக்கை பொய்யென்று**<br>
**அறிந்திலையோ - ஏக்கமேன்**<br>
**சொல்வதைக் கேள்**<br>
**முத்தம் சொர்க்கத்து வாசலடி**<br>
**கன்னத்தை என்பக்கம் காட்டு.**

இவ்வாறு தனது இலக்கியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியை 19 வயதிலேயே ஆரம்பித்த மணிப்புலவரவர்கள் படிப்படியாக தன்னையும் இலக்கியத்தையும் வளர்த்துக்கொண்டு கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார்கள்.

தொடர்ந்தும் இலக்கியப் பணிக்கு தன்னை அர்ப்பணித்த மணிப் புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்கள் மரணிக்கும் வரை ஓயாமல் எழுதிக்கொண்டேயிருந்தார்கள்.

கவிதை, கட்டுரை, நாடகம், அறிவியல், ஆய்வு, இயற்கை வைத்தியம் போன்ற சகல துறைகளிலும் தடம்பதித்த தென்கிழக்கின் மறக்கவொணா ஆளுமையாவார்.

**எழுதிய நூல்கள்:**

1. பன்னீர் வாசம் பரவுகிறது (சிறுகதை) - 1979.
2. மறக்கமுடியாத என் இலக்கிய நினைவுகள் (கட்டுரை) - 1990.
3. இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள் (தொகுப்பு) - 1992.
4. பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும் (கவிதை) - 1995.
5. மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை (ஆய்வு) - 1995.
6. இளமையின் இரகசியமும் நீடித்த ஆயுளும் (அறிவியல்) - 1996.
7. நீரிழிவு வியாதியும் அது பற்றிய சில அனுபவக் குறிப்புகளும் (அறிவியல்) - 1997.
8. தென்கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு (ஆய்வு) - 2001.
9. வேர் (வரலாறு) - 2002.
10. சர்வ மதங்களிலும் நோன்பு (அறிவியல்) - 2004.
11. தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல் (ஆய்வு) - 2007.
12. மூட மறுக்கும் விழிகளும் துடிக்கும் இதயமும் (கவிதை) - 2009.
13. கூடுகட்டத் தெரியாத குயில்கள் (சிறுகதை) - 2009.
14. போருக்கப்பால் மனிதநேயம் தேடல் (சிறுகதை) - 2009.
15. தமிழ் மொழியின் பூர்வீக வரலாறு செம்மொழி அந்தஸ்து சீர்திருத்தங்கள் (ஆய்வு) - 2012.
16. இது ஒரு தங்க நூல் (அறிவியல்) - 2014.
17. இராமர் இந்தியாவில் பிறக்கவில்லை (ஆய்வு) - 2016.
18. கோவில் மாடும் ஹோட்டல் பூனையும் (கவிதை) - 2017.
19. இளமையின் இரகசியமும் முதுமையின் அவசியமும் (அறிவியல்) - 2019.
20. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பள்ளுப் பிரபந்த இலக்கியம் (ஆய்வு) - அச்சாகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்ற விருதுகள்:**

- தாஜுல் அதீப் (இலக்கிய வேந்தர்) விருது - முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களம்.
- கலாபூஷணம் விருது.
- கிழக்கு மாகாண ஆளுநர் விருது.
- இலக்கிய பேரவை விருது.
- இலக்கிய சுடர் விருது - இந்திய இஸ்லாமிய இலக்கிய கழகம்.
- முத்தமிழ் வித்தகர் விருது - 2007.
- தமிழ் இலக்கிய விழா விருது - 2008.
- அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழா விருது - 2014.
- கலைஞர் சுவதம் விருது - 2017.
- மசூர் மௌலானா தேசமான்ய விருது - 2018.

இன்னும் பல ....

**நன்றி.**

முக்கிய தகவல்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர் P.M.M.A. காதர் அவர்களின் கட்டுரைகளிலிருந்து பெறப்பட்டவை. கலாபூஷணம் P.M.M.A. காதர் அவர்களுக்கு மிக்க நன்றி.

• • •

கவிஞர்களே!

வெண்ணிலா கவிதை மஞ்சரி இதழ்: 03 – ஒக்டோபர் 2021 பற்றிய தங்களது கருத்துகளை விரைவில் எமக்கு அனுப்பிவைக்கவும்.

அத்துடன் வெளிவரவிருக்கும்

வெண்ணிலா கவிதை மஞ்சரி இதழ்: 04 – ஜனவரி 2022 இல் பிரசுரிக்கத் தகுந்த கவிதைகளை உங்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம்.

அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி:

வெண்ணிலா
கவிதை மஞ்சரி
ஆசிரியர்: கவிஞர் எஸ். ஏ. கப்பார்,
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை–03 #32314.

மின்னஞ்சல்:
kavignarsagaffar@gmail.com

வட்ஸ்அப்:
**077 6968 671**

– நன்றி. –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு நாய்களின் சங்கமம்

வாங்கி வளைத்து போட்ட
வேலிக்குள் ஒன்றும்
வெளியே பங்கு போகாப்
பரந்த நிலத்தில் ஒன்றும்
பின் தட்டைத் தேய்த்துக் கொண்டு

வானை அண்ணார்ந்து பார்ப்பதுவும்
பின் ஒன்றை ஒன்று
பார்ப்பதுவுமாகப்
பேசிக்கொள்கிறது

அவ்வப்போது அதன்
பின்னங்கால் உயர்த்தி
காதைச் சொறியாமலும் இல்லை
முன்னங்கை பலமற்ற
ஜீவன் போலது

நாய், நாய்ப் பாஷையால் ஏதேதோ
பேசுகிறது
அது எந்த வீட்டுத்
தேய்காய்ப்பாதியைத் திருடிய
கதையோ

யார் கடன்பட்டு வாங்கி வைத்த
நாய்ப் பனையானைக் கவ்விய
மகிழ்ச்சி பொதிந்த கதையோ

யாருடைய இரகசியத்தை தெருவில்
இழுத்து விட்டு இயற்கைக்குச்
சிரிப்பூட்டுகிறதோ
உள்ளர்த்தங்கள் தேடிய
ஆராய்ச்சி மிகு கதையோ

இல்லை ஊரை உலையில் இட
என்னென்ன தந்திரங்கள்
செய்கிறதோ

நாய் அவ்வப்போது
அதன் வாலை
நிமிர்த்திச் சுருட்டாமலுமில்லை

தெருவோர வெட்டையில்
வேலிக்குள்ளும், வெளியும்
இருந்த
நாய்களுக்கு பல வண்டிகள்
தன் வாயுவை பின்புறமாக
தள்ளிவிட்டுச் செல்கையிலும்

மூக்குச் செத்த நாய்களதை
முகரவும்
முயற்சி செய்கிறது

நாய் நாய் பாஷையில்
ஏதேதோ பேச அது புரியாத
நான்
என்னைத்தான் குதறுவது பற்றிய
திட்டம் தீட்டுகிறதோ என்று
தள்ளி நடக்கிறேன்

நாய் அதன் வாலை நிமிர்த்த
முயற்சித்தபடி
சுருட்டிக் கொண்டு
ஒன்றுக்கொன்று
வானை வளைக்க முயன்ற படி
கழுத்தை நீட்டி நீட்டிப்
பேசுகிறது,

நாய் பாஷையில்!

•••

**- க. ஷியா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக்கு ஒதுங்கிய வானம்

நேற்றுப்போல் இருக்கிறது
தோற்றுப்போன அந்த
மாலைப்பொழுதுகள்
வானம்......அடைமழைக்காய்
கருக்கட்டியபோதும் கடப்படியில்
கால்கடுக்க காத்துநின்றாயே

அடைமழைக்கும் அஞ்சாது
குடைகூட எடுக்காது
ஓடோடி வந்தேனே
இருக்கின்ற குடையும்
இல்லாமலாக்கிவிட்டு கொட்டும்
மழையிலும் கொடுகிப்போய்
நின்றாயே, மறந்தேபோனதோ
வேலைதேடி வெளிநாடு சென்று
வரும்வரை வாசலில் நிற்பேன்
என்றவளே
வேறொருவனின் கருவுடன்
வேலியோரமாய் நிற்கின்றாயே
இவனை
மழைக்கு விட்ட வானமாய்
ஒதுக்கிவிட்டாயோ.

• • •

## இருட்டு

நெரிசலே இல்லாத ஒற்றைத்தெரு
ஒரு பைத்தியக்காரன்
ஒரு எருமை மாடு
நான்...
பைத்திய காரனின் சிரிப்பையாவது
தராவிட்டாலும்
எருமை மாட்டின் உரசலையாவது
தராமலே சென்று விட்டாய்
வானில்
தேய்பிறை ஒன்று
நகர்ந்து செல்கிறது.

• • •

## எரிச்சல்

ஓடை நீருக்குள் என்னை
பார்க்கிறேன்
நீர் என்னை பார்க்கிறது
நீர் பார்க்காமலே போகிறாய்
யார்
ஓடைக்குள் கல்லை வீசியது.

• • •

**- எம் சீ யே பரிட் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவற்றில் நெஞ்சைத் தொட்டுச் சென்ற கவிதைகள்...

# தாலாட்டு

ஈரைந்து திங்கள்
இரவு பகல் விழித்திருந்தேன்
கண்மணி உன் முகம் காண
காலமெல்லாம் காத்திருந்தேன்.

அன்பு எனும் அமுதூட்டி
பாசத்துடன் பண்பூட்டி
நல்லவனாய் வளர்த்திடுவேன்
என் ராசாவே கண்ணுறங்கு.
வீட்டிற்கும் நல்லவனாய்
நாட்டிற்கும் வல்லவனாய்
அறிவால் வலுவூட்டி
வளர்த்திடுவேன் கண்மணியே.

ஈயெறும்பு தீண்டாமல்
கண் கறுப்பு பட்டிடாமல்
நானிலத்தார் போற்றும்படி
செய்திடுவேன் ராசாவே.

படைத்தவனை மறக்காமல்
பெரியோரை நோகாமல்
பெருமையுடன் வாழ்வதற்கு
ஆண்டவனே அருள் புரிவாய்.

ஊருக்கு உழைத்திடணும்
உறவுகளுக்குதவிடணும்
ஏழைகளுக்கில்லையெனா
மனதுடனே வாழ்ந்திடணும்.

நான் பெத்த ராசாவே
நாளைய என் பெருமகனே
உன்வாழ்வு சிறப்பதற்காய்
இறைவனை நான் கெஞ்சுகிறேன்.

**- ஏ. ஆர். ஏ. சத்தார். -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சம்

நான் கடலைப் புன்னகைக்கிறேன்.
ஒவ்வொரு அலைக்கும்
எவ்வாறு நீந்துவது என்ற புனைவில்.
கொரோனாவை அழுகிறேன்.
ஒவ்வொரு அலைக்கும்
எவ்வாறு மறுக்குவது என்ற நினைவில்.
அலை என்பது
கரையில் முறியும்
என்பதை அறிந்ததிலிருந்து
ஓர் உள் அச்சம்.

• • •

## பொய்யுணர்வு

அலையின் கட்டிலில் கிடந்து
மருட்சியுடன் பார்க்கிறேன் கரையை.
அங்கே அவர்கள் நடனமாடுகிறார்கள்.
அங்கே புனைகிறார்கள்.
அங்கே உணவு என ஏதோ பரிமாறுகிறார்கள்.
அங்கே மாடிகளை அலங்கரிக்கிறார்கள்.
அங்கே காதலர்கள் வாழ்கிறார்கள்.
அங்கே இனிய உரையாடல் நிகழ்கிறது.
இன்னும் என்னை அமிழவிடாது
தடுத்துக் கொண்டிருக்கிறது
எனது கடல்.

**- டீன் கபூர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரேட் நிறத்தில்

முதல் முதலாக எழுதிய கடிதத்தில்
ஒரு பியானோக் கலைஞனின்
விரல்கள்போல் எழுத்துகள்
தடிமனாகி இருந்தன

அரங்கத்தில் இன்னும் தொடரும்
இழப்பை
ஆழ்கடலை நோக்கித் தூரவீசும்
கூழாங்கல் என நினைத்துப்
பாரத்தின் அளவை இறக்க
முடியவில்லை

தவிப்பைக் கையகப்படுத்தி
மரப் பொம்மையை இழந்த
குழந்தையைப்போல் நிற்கிறேன்

ஆழமான மூச்சிழுத்து
விரல்கள் தழுவி முரட்டு
முதிர்ச்சியில்
புனைவு பேசுகின்றன
ஜன்னல் கம்பிகள்

கடைசி முறை
என்னிடம் வந்த கடிதம்
சொற்களை நிறுத்தி
ஆத்மாவை அடைத்திருந்தது

முகத்தைப் பறித்து ஒரு பூவை
மட்டும்
கைமாறாகச் சொருகியிருந்தது

மிருதுவான இளம் சிவப்புக்
கரேட் நிறத்தில்.

•••

# குழந்தை போன்ற பெண்

பூரண அலங்காரமென
கன்னத்தில் பவுடர் தெளிக்கையில்
உம்மாவின் கைகளால் கிள்ளு
வாங்குவேன்

மகிழ்ச்சியும் துயரமுமற்ற
குழந்தைபோன்ற பெண் நான்

பொது மொழியொன்றைக்
கற்பிதம் செய்கின்றேன்
எனக்குப் பிடித்த ஒரு
பெண்ணுடலைப் புனைகிறேன்

உச்சியில் பறக்கும் கழுகுகளின்
வாசனையை உணரப்
பழகி விட்டேன்
கனவுகள் படபடக்கும்
நாளொன்றின்
என் நேரம்
காவு கொடுக்கப்படும்
நிமிடங்களை எண்ணுகிறேன்
வெடித்துப் பறக்கும் இலவம்
காத்திருப்பதில்லை
யாரையும்.

•••

**- பாத்திமா சஹீபா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகள்

வீதிகள்
வெறும் கோடுகளல்ல
அது
காலத்தாலான அங்காடிகள்

இங்கு காலத்தை கொடுத்து
நம் தேவைகளை வாங்கலாம்

செலவு செய்யும்
காலத்தின் நீளத்திற்கேற்ப
காட்சிகளும் கவிதைகளும் கூட
கிடைக்கும்

ஆரம்பம், முடிவு என இரண்டு
புள்ளிகளுக்கிடையே
வியாபாரம் நடக்கும்

பொழுதுகளை வாங்கிக் கொண்டு
நம் மனப்பைகளை
மகிழ்ச்சியால் நிரப்பிவிடும்
பூப்போட்ட சட்டையணிந்த
வீதிகளுமுண்டு

மரவரிசைகளின் நடுவே
அதன் நிழலைத் தின்று கொண்டு
நெளியும் பேராறு போல்
அழகான வீதிகள் ஆயிரமுண்டு

பிரயாணங்கள் நூலகங்களைப்
போல்...
வெளியேறும் போது
அனுபவப் பாடங்களை
ஒட்டியனுப்பும்

நகராதிருந்து கொண்டு
வாழ்க்கையை நரகமாக்காது
மனசின் மேச்சலை
மெச்சுவோம்

எட்டிப்பார்க்காத வரை
தெரிவதில்லை
கிணற்றுக்குள் மிதக்கும்
பௌர்ணமியின் அழகு.

•••

# கோத்தல்கள்

தட்டி நிமிர்த்த வேண்டிய இடங்கள்
உடனே புலப்படுவதில்லை

மறுநாளோ அடுத்த வாரமோ
வாசிக்கும் போதுதான்
கவிதையிலுள்ள
ஓட்டை உடைசல்கள் பல்லிழிக்கும்

கவிதையின் ஆழங்களை
எதையோ போட்டு
நிரப்பியிருப்போம்

கவிதைகளுக்குள் ஏதோவொரு
அலைச்சலிருக்கும்

அது தன் புழுதிக்காலால்
ஆங்காங்கே தடம் வைத்திருக்கும்

காலம் கடந்து
பொருத்தமான சொற்கள் வந்து
காலைச் சுரண்டும்

எழுதும் போது
மூடிய கைகளுக்குள்ளிருந்த
இல்லாமை இக்கனம்
சொற்களால் வழிந்தோடும்

அப்போது
புதுப்பிக்க முடியாத தூரத்தில்
கவிதை இருக்கும்

அது சில like களை சுமந்து
கொண்டு
ஒளியின் வேகத்தில் பறந்து
கொண்டிருக்கும்

ஒரு நாளும்
முழுமையடைந்த கவிதையை
எழுதி முடித்ததில்லை
இன்றும் தான்.

**- முகமட் நாபி -**

**நாபியின் கிறுக்கல்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று உயிர்களின் உற்சாகம் நிலை குலைந்த ஓர் இரவு

வெயில் காலம் அடி வேர்வரை
நீரூற்ற நெடு நாட்களின் பின்
மா வரைந்த கோலம்

பூவும் பிஞ்சுமாய் புதினமாய்
தெரிந்த போது பரவசம்
என்னுள்ளும் பரவிகிடந்தது

மாமரத்தை மகிழ்ச்சியுடன்
மனதால் வருடிவிடுகிறேன்

மாங்கிளையில் கூடமைந்த
மஞ்சள் நிற குருவி
தத்தி தத்தி கீச்சொலியுடன்
ஒவ்வொரு கிளைகளாய் அச்சத்தில்
பதறிப் பதறி தாவுகிறது

என்னால் உனக்கு
ஆபத்தில்லை என்பதை அந்த
சின்ன இதயத்துக்கு எப்படி
புரியவைப்பேன்

உள்ளே சென்று சன்னல் திரையை
விலக்கி கவனிக்கையில்

அச்சத்தின்
கனதி நெஞ்சில் நீங்கிப்போக
நிம்மதியான அந்த மஞ்சள் குருவி
அடைகாக்க தொடங்கிவிட்டது

சிறு பொழுதான் -

இரவெல்லாம் மின்னல் முழக்கம்
மழை பெருங்காற்று
மழை விட்ட விடியலில்
அசாத்திய அமைதி

உதிர்ந்த பூவும் பிஞ்சுமாய்
முற்றத்தில் மாம்பூக்கள்
விரவிக்கிடக்க நடுவில் மூன்று
முட்டைகளின் சென்னிறம் கலந்த
கோதுகள் ஈரக்களிம்பில் உடைந்து
செங்குத்தாக கிடக்கிறது

என் கண்கள் குருவியை தேடி
தாழ்வாரக் கூரையின் விளிம்பில்
நிலைகுத்தி நிற்கிறது

விடியும்வரை இயற்கையோடு
போராடி தோற்றுப்போன அந்த
ஜீவன் நனைந்த இறகுகளை
விரித்து சூரியக்கதிரின்
ஒளி துண்டில் ஈரம் உலர்த்திக்
கொண்டிருக்கிறது

என்னைக் கண்டு நேற்றுப்போல்
பதறவில்லை என்னால் எதுவும்
இல்லை என்று
புரிந்து கொண்டதோ

நேற்றுவரை சிரித்த குழந்தையாய்
ஜொலித்த மாமரக் கிளைகள்
வெற்று கொப்புகளாகி
ஒருகப்பில் நிலைகுலைந்த
குருவியின் கூடு நிலம் நோக்கி
தொங்குகிறது

பார்க்க மனசில் இலேசான வலி
கவலையாகிறது.

**- மருதூர் மௌஜூன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை நமக்கும் மூப்பு வரும்

நாளை நமக்கும் மூப்பு வரும்
நரைக்கும் இளைக்கும் அசதி வரும்
இளமைத் தோற்றம் மறைந்து விட
எவர்க்கும் முதுமை வந்து விடும்

நாளை

முதுமை யாளர் - மூத்த வர்கள்
முழுதாய் நமக்காய் உழைத்த வர்கள்
இளமை வாழ்வை நமக் கென்றே
அன்று தொலைத்த பெரிய வர்கள்

பழசு என்றே அவர்க ளினைப்
பழித்தால் மனசு நோகாதோ?
அனுப வத்தால் உயர்ந் திட்ட
அறிஞர் தம்மை விலக்கு வதோ?

நாளை

தள்ளி வைத்து முதிய வரைத்
தவிக்க விடுதல் முறை தானோ?
அள்ளி அணைத்து வளர்த் தவரை
அலைந்து திரிய விடலாமோ?

தொல்லை யென்று அவர்களினைத்
தூரவிட்டு விலகு வதோ?
பிள்ளைகள் உள்ள போதினிலும்
பெரியோர் - மூத்தோர் வருந்துவதோ!

நாளை.

**பா வே ந் த ல் பா ல மு னை பா ரூ க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு
# வழிப்போக்கனின் வேண்டுகோள்

எனது
தேவையை நிறைவேற்றும்
ஆசாவை
எவரெவர் கைகளில்
கொடுத்தாயோ
அவர்களுக்கு
எனது
முதுமையின் தளர்வையும்
முள்ளந்தண்டின் வலியையும்
விளங்கப்படுத்து

எனது
நரைமுடியின்
விண்ணப்பத்தையும்
ஊன்றுகோலின்
வேண்டுகோளையும்
அவர்கள் பரிசீலனைக்கு
எடுத்துக் கொள்ள
அவர்களின் ஞானக்கண்ணைத்
திறந்துவிடு

எனது
கனவுகளின் சுமையினையும்
கடமைகளின் பாரத்தையும்
உணர்ந்து கொள்ள
அவர்களின் மனத்திரையில்
பசியோடு மௌனிக்கும்
குழந்தைகளாய்ப் புலக்காட்சி
செய்

தினமும்
எனது
வயோதிபச் சருமத்தில்
வந்து விழும் பனிக்காற்று
வைகறையில் என்னை
வருத்துவதை நினைவூட்டு

நீண்ட தூரமொன்றில்
நெடுநாளாய் வழிப் போக்கி
எனது
கால்கள் இடறுவதை
கருணையுடன் பார்க்கச் செய்

புற்பூண்டின் தாகம் தீர்க்க
மலைகளைப் பிளந்து
நீர்வீழ்ச்சியாய் ஓடச்செய்தவனே
எனது முதுமையின் கூனலில்
ஒரு கடுகளவு
களிம்பு சொட்டு !

•••

**- ஜலால்டீன் மஹாகவி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரானவளே...!

காற்றெல்லாம்
வெளியேற்றி
வெற்றிடத்தில்
எனைநிறுத்தி
அறைகதவு நீ தாழிட...

கட்டெறும்பொன்று
கால்கடித்து கெஞ்சியதென்று
நீ சொன்ன கதையெல்லாம்
நான் ரசித்தேன்...!

கறுத்த பறவையொன்று
சிவந்த சிறகோடுவந்து
ஏகாந்த அழகில்
உன்னாடை சுமந்த
பழம் கொத்த...
மனக்கண்ணில் பேனா
தேடுகிறேன் கவிவடிக்க...!

எங்கே நீயிருந்தாலும்
என் கனவுகளின்
மதில்மேல் நீ நடைபோட...

உலகின் அழகெல்லாம்
உன் பாதம் வழி வழிந்தோடிட
உனை நோக்கியே
நீண்டிடும் எனது கரங்கள்
கவியால் அணைத்திட...

உன் செவிநெருங்கி
ரகசிய சேதிசொல்ல
தவித்திருந்த என் ஈரிதழ்
ஒதுங்கிய முடிகண்டு
வியர்த்து உலர்ந்து...
மருண்டதொரு கதை...
வடமேற்கும் தென்கிழக்கும்
என்னவளென வரிந்துகட்ட
ஐந்தாம் திசைதேடி
நான் தொலைந்த கதை

என்ன சொல்ல...!
என் மொத்த உலகின்
தெருவெல்லாம் தொலைந்திட
நான் அமைத்த
ஒற்றையடிப்பாதையில்
நாடோடியென நான் திரிய
முடிவில் முடிவாய்
நீ நின்றிட...!

சரியானதை தேர்ந்தெடுவென்று
நீ கொடுத்த மூன்று
வாய்ப்புகளும்
தவறானதாயிருக்க...
எதை நான் தேர்ந்தெடுக்க
என்னுயிரே...!

யாரடி
நீ...?
என் தோழியா...?
என் காதலியா...?
என் மனைவியா...?

உன் இதயம் எரிந்து
மிஞ்சிய சாம்பல்தனை
என்னுயிரில் பூசும்போது
தெரிந்துகொண்டேன்...!

என் கண்ணீருக்கு
சொந்தமானவள் என்று...!

**- வித்யா சந்தோஷ்குமார்.**
(தமிழ் நாடு, இந்தியா.)

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் சலனமற்றவன்

அணுகுண்டு வார்த்தைகளைக்
கக்கியே பழக்கப்பட்ட
என் பேனா பீரங்கி
ஏன் இன்று பூக்களைச்
சொரிய எத்தனிக்கிறது?
யாராலும் சலனப்பட்டு
போகாத என் இதயம்
இருக்கும் இடம் விட்டு
எங்கேயோ போய்
வந்து கொண்டிருக்கிறது.
காதலுக்கும், நட்புக்கும்,
இனக் கவர்ச்சிக்கும்
இலக்கணம் சொல்லி
வந்த நான்
ஏன் இன்று ஏதோ
ஒன்றுக்கு இலக்கணம்
புரியாமல் இருக்கிறேன்?
எவர்க்கும் அஞ்சாத
என் எழுத்துக்
குழந்தைகள் கூட
இன்று எழுந்து நிற்க
சக்தியின்றி சோர்ந்துவிட்டன.
இல்லை இதுவல்ல நான்.
பூக்களைத் தூவ பூமியில்
வேறு பல பேனாக்கள் உள்ளன.
என் எழுத்துக்கள்
மின்சாரம் பாய்ச்சவே
பிறந்தவை.

நிச்சயமாக...
நான் சலனமற்றவன்.

•••

## குழந்தைச் சிரிப்பு

அந்த குட்டிப் பெண்ணின்
சிரிப்பில் அப்படி என்னத்தான்
இருக்கிறதோ தெரியவில்லை

கொள்ளைக் கொள்ளையாய்
அவள் வெள்ளைச் சிரிப்பில்
கொஞ்சம் கொஞ்சமாய்
என்னைக் கொள்ளையடித்துக்
கொண்டு போய்விட்டாள்

அவள் ஒவ்வொரு முறை
மலர்ந்த போதும் என் மனதில்
ஈரமாய் ஒன்றிரண்டு பனித்துளிகள்
அவள் வாய் நிறையச்
சிரிக்கும்போதுதான்
மகிழ்ந்திருத்தலின் மகத்துவம்
புரிகிறது

என்னச் செய்வது...?
கேட்கும்போதெல்லாம்
பூ பூத்துச் சொரிய சிலருக்கு
மட்டும்தான்
வாய்த்திருக்கிறது!
ஒவ்வொரு புன்னகையின்
முடிவிலும் நான்தான்
உடைந்துபோனேன்

அந்த நொடி அப்படியே
உறையாதா என்ற
எதிர்பார்ப்பிலும்...

மீண்டும் அந்த நாட்கள்
எனக்கும் வாய்க்காதா
என்ற ஏக்கத்திலும்.

•••

**- எட்வின் பிரிட்டோ -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருமுகிலைக் கழற்றிவிடு

என்னையே சுற்றிவரும்
எழிலான முழுநிலவே
முன்பிருந்த அழகுயெங்கே
முகந்தோய்ந்து போனதுமேன்?

முழுமதியாய் இருந்தவளே
முக்காடு ஏனிட்டாய்
முழுக்கவுன்னை ஏன்மறைத்தாய்
முகவரியை ஏன்துறந்தாய்?

சூழவுன்னை இருந்துவந்த
சுற்றமென்றும் மென்மைதானே
சூழவின்று உள்ளவைகள்
சுத்தமில்லாக் கருமுகிலோ?

கருமுகிலைக் கழற்றிவிடு
கண்விழித்து எமைப்பாரு
துருப்பிடித்த உன்வதனம்
துலங்கிடநீ துடைத்துவிடு.

•••

## விழிநீர் சுடுகவி

விழிகசிந்து நீர்த்திவலை வழியும்
வலிதந்த தீயினையும் அணைக்கும்
பழிதீர்க்கும் இழிசெயலை எண்ணி
புலம்பிமனம் ஏகனிடம் ஏங்கும்

விழிபிழிந்த நீர்வழிந்து கொட்டும்
வீண்பணிசெய் கரூரரினை வாட்டும்
பழிவினைசெய் அராஜகத்தை அடக்கிப்
பழிதீர்க்க இறைமன்றில் நனையும்

விழியிழந்த சுடுநீரும் வேகும்
விதியறியா ஈனர்களைச் சாடும்
பழிகாணும் இழிசெயலைச் செய்வோர்
பதறியழ இறையிடத்தில் கெஞ்சும்.

•••

- நியாஸ் ஏ ஸமத் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடலும் கூடலும்

எத்தனை
மணித்தியாலங்கள்
காத்திருந்து விட்டேன்
ஒவ்வொரு மணி
நேரமும்
வருடங்கள் தரும்
வலியினை
தந்துவிட்டன
ம்ம்
நீ கண்டுகொள்ளவேயில்லை.

காலை தேநீர்
வேளையில்
நீ அனுப்பும்
இதய சின்னமும்
முத்த ஸ்மைலியும்
இன்று காணவேயில்லை.

என் தொலைப்பேசி
சிணுங்கவே இல்லை
நானும் தான்
உன் கொஞ்சல் இன்றி
கோபத்தில்
என்னை போல்
உன் தொலைப்பேசியும்.

போ
இன்று
உன்னுடன்
பேசப்போவதாய் இல்லை
நான்
உன் எந்த வார்த்தைக்கும்
மயங்கவே மாட்டேன்
மன்னிக்கவும் மாட்டேன்.

ஆனால்
தயவு செய்து

'அதிக வேலை குட்டிம்மா
அய் லவ் யு'
என்று மட்டும்
சொல்லிவிடாதே
உன்னை
அணைத்துக்கொள்வதை
தவிர
எதுவும் நினைவில் இருக்காது
எனக்கு..!

**- கயல்விழி மணிவாசன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னைக்கு நான் அன்னையாக வேண்டும்

மழை நீரில் நனையாதே
ஜலதோஷம் பிடித்துவிடும்
முழுவதும் நனைந்துகொண்டு
முந்தானையால் என் தலை
மூடும் தாயிடம்
--உனக்கு ஜலதோஷம்
பிடிக்காதா அம்மா...!

காலைக்கடன் கழிப்பதற்கு
காட்டுக்கு போகும் போது
காலில் முள்ளு தைக்கும்
முதுகினில் ஏறிக்கொள் -
உப்புமூட்டை சுமந்தவளே
--உன் பாதம் முட்கள்
துளைக்காதா அம்மா...!

பிடியளவு சோறு தான்
பானையில் இருந்தாலும்
பிள்ளை வயிறு பசி
பொறுக்காது என்பவளே
--உன் வயிறுக்கு
பசிக்காதா அம்மா...!

வேதனை எனக்கென்றால்
விம்மி நான் அழுதால்
விடியும் வரை விழித்திருந்து
விழியில் உதிரம் வடிப்பாயே
--உன் விழிகள்
வலிக்காதா அம்மா...!
தவறுகள் நான் செய்ய
தண்டனை நீ பெற்று
குற்றம் உன்மேல் எனும்
சுத்தமானவளே
--உனக்கு கோபிக்க
தெரியாதா அம்மா...!

காற்றுப்பட்டு நான் வீழ்ந்தாலும்
கண்பட்டு வீழ்ந்தேன் என்று
ஊருக்கே திட்டிவிட்டு
கண் திருஷ்டி கழிப்பவளே
--உனக்கு கண்ணானேனா
நான் அம்மா...!

தோளுக்கு மேல் வளர்ந்த
பின்பும் தலை துடைத்து
எண்ணெய் தேய்க்க
--உனக்கு இன்னும்
சலிக்கவில்லையா அம்மா...!

விக்கினாலும் தும்மினாலும்
நினைப்பது என் பிள்ளை என்று
நெகிழ்கின்றாயே அம்மா...!

நினைத்துக்கொள்கின்றேன்,

இன்னுமோர் பிறப்பில் உனக்கு
நான் அன்னையாக...!

**- கயல்விழி மணிவாசன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வனராணியின் நாளேட்டிலிருந்து...

உயிரோடு பிடுங்கி
வேற்று மணல் பரப்பில்
வேர் விடும்
வலிகளோடு
நினைத்தவுடன்
சாக முடியவில்லை
என்னால்

என்னைச் சுற்றியே
புதைத்தவர்களின்
உயிர்வேர்
மலர்ந்து நிற்பதாய்
கதை கூறினார்கள்

பரவாயில்லை
என்
உயிர் காற்றை விடுவித்து
உங்களை
உயிர்ப்பிக்கிறேன் என்றேன்
நிஜத்தை துறந்த நான்
நிலத்திற்குள் புதைந்தேன்

இப்போது நான்
இலை விரித்து
கிளை தாங்கி
நிழல் பரப்பி
கூடு சுமக்கும் மரமாய்

மேகத் தாலாட்டு
என் முகவடிவை
மறைத்து நிற்க
சோகம் சூடிய சுவடுகள்
விம்மிப் பரவும்
வேருப்புக்களாகின்றன

சல சலக்கும் ஆறுகளுக்கும்
சஞ்சரிக்கும் பறவைகளுக்கும்
சந்தோஷம் கொடுப்பவள் நானெனும்
நாமத்தோடு இப்போது நான்...

என் இலை கிளைகள்
வடிந்து உதிர்க்கும் நீர்க்கோடுகளை
குளிரும் மழையெனக் கருதிய
உறவுகள்

மரபுச் சட்டங்களை
மதித்து
மண் காத்த
மகராசி நானென
கொண்டாடி மகிழ்கின்றார்கள்

எப்படிப் புரியவைப்பேன்
வனராணி யென்
வெளியில் தெரியா
வெயிலின் ரணங்களே
நீங்கள்
கோப்பைகளிலும்
செம்புகளிலும் பிடித்து மகிழும்
துளிகளென.

**- வானம்பாடி முஜா**
நிந்தவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் பெறுமோ என் கவிதை...

புதிதாய் படைக்கப்படும்
எதுவுமே
பொலிவுகளைத் தாங்கி
வரவில்லையென
அடிக்கடி
உருக்குலைந்து போகிறேன்

எதுகை மோனைகளென
எதுவுமே கைகூடவில்லை
எனக்கு,
இப்போதெல்லாம்
வெறுமையின்
வண்ணங்களே எடுப்பாக

வறுமை தின்று
வலிமை குன்றிய
தூரிகை மட்டும்
தினமும்
என் கிறுக்கல்கள் கண்டதும்
இறுக்கமான
தன் உதடுகள் விரிய
பல்லிளித்துச் சிரிக்கின்றது

மொழியின் தேவதை இவள்,
மூக்கும் முளியும்
செப்பமில்லையென

இருந்தும்
போக்கிடம் வேறில்லையென
கட்டுகட்டாய் தாள்களை
அடுக்கிப் பார்க்கிறேன்
கனவு காணாதே
கவிஞன் நீயில்லையென
காலம் என்னைப் புறம் தள்ளி
அழித்துவிட எண்ணுகிறது

ஒத்துக் கொள்கிறேன்...

களைத்துப் போன
என் நா வறண்ட வார்த்தைகள்
எழுந்து நிற்க வலிமையின்றி
இன்றோ நாளையோவென
இறக்கக் கிடக்கின்றன

எஞ்சியிருக்கும்
என் பலவீன எதிரொலிகள்
கைகால் பிணைக்கப்பட்டு
வாழ்க்கை கனவுகளென
கற்பனை நெரிசலில்
தொலைந்து தடுமாறுகின்றன

உயிரற்ற கவிதை நான்
இப்போது,
கலங்கி நிற்காமல்
எழுத்துக்களை
எடுத்தெடுத்து
அணிந்து பார்க்கிறேன்

எங்கே
நான் தொலைத்த
நடையழகின் உயிர்ப்பும்
வர்ணக் குழம்புகளுமென
தேடியபடி...

**- வானம்பாடி முஜா**
நிந்தவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொப்பனம்

தனித்த பாதை
சுட்டெரிக்கும் சூரியன்
சுடாத பாதம்
சுவடுபதிக்கும் நிழல்
வலிமிகுந்த பயணமொன்றில்.....

வேற்றுக் கிரகமிருந்து
வெண்கலம் தரையிறங்குகிறது.

அதுவொரு
அடர் வனம்
வெண் பஞ்சு முகில்
மிருதுவின் இருப்பிடம்
பாதம் தழுவி கண்முன்னே
விரிகிறது.

அந்த ஏணிப்படிகளில்
பாதச் சுவடுகள்
பதிக்கப்படுகிறது

அழகிய அனுபவம்
அற்புதக் காட்சி
தேன் கலந்த தூறல்

மெய் மறந்து
நிலை குலைந்து
உயரப் பறக்க
ஒய்யாரமாய் அமர்கையில்

எண்ணங்களை விலங்கிட்டு
நிஜங்களை காற்றில் கரைத்து
விழிகள் வியர்த்தோட அந்த
சொப்பனத் தேர்
கற்பூரமாய்க் கரைந்தது.

•••

# கோபம்

உங்களிலிருந்து
தூரத்திலிருப்பதாய்ப்
புலம்புகிறீர்கள்

கோபமாயிருக்கிறார்
நெருப்பாயெரிகிறார்
என்கிறீர்கள் இதனால்
புரையோடியிருக்கும்
அழுத்தங்களின் முடிச்சுக்களை
அவிழ்க்க சிரமப்படுவதாய்
மீண்டும் மீண்டும்
வேதனைகளையே
கோர்த்துக் கொள்கிறீர்கள்

கோபம் அன்பை நலினப்படுத்தும்
உடல் தசைகளை சோர்வாக்கும்
மனபாரத்தைக் கூட்டும்
சீரற்ற குருதி பாய்ச்சும்
நம்மை அழித்துக் கொள்ளத்
தூண்டும்

இப்போதெல்லாம்
நான் கோபப்படுவதாயில்லை
ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும்
சொருகியிருக்கும் முட்களை
ஆராய்வதாயுமில்லை

அன்னப்பட்சியாய்
அன்பை மட்டும்
பிரித்தறிகிறேன்
அமைதியாகிறேன்
சூழலை மாற்றியமைக்கிறேன்
என் பிராத்தனைகள்
எல்லாம் ஒன்றே ஒன்றுதான்
இன்னுமின்னும் என்னை நானே
சிதைத்துக் கொள்ள
போவதில்லையென்பதே.

- பாத்திமா ஸூபா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானொன்றும் அவதாரமில்லை

நானொரு பெண்
உங்கள் கண்களை பறிக்கும்
வர்ணமிகு மலர் நான்
காலத்தின் வெயிலின்
தாங்கொணா வெம்மையில் சிக்கி
உதிர்ந்து கிடக்கிறேன்
மறுபடியும் என்னை
மலர்ச் சொன்னால்
எங்கனம் சாத்தியமாகும்
ஒரு முறை பூக்கவும்
ஒரு முறை உதிரவுமே
என்னால் முடியும்
அதுதான் காலம் என் மீது
எழுதித் தீர்த்த விதியுமாகும்
நீங்கள் நினைத்தவுடன்
பூத்துக் குலுங்குவதற்கும்
உதிர்ந்து போவதற்கும்
நானென்ன அவதாரமா
எல்லாப் பூக்களும்
வாடி உதிர்வதில்லை
சில பூக்கள்
திட்டமிட்டுப் பறிக்கப்படுகின்றன.

• • •

# சிறுமியின் உடைந்த குடை

வீட்டின் ஒதுக்குப் புறமாக
அனாதரவாக கிடக்கிறது
சிறுமியின் உடைந்த குடை

அதன் சீலையில்
வரையப் பட்டிருக்கும் வானவில்
இப்போதும் சாயம் போகாமல்
அப்படியே ஒளிர்கிறது

குடை உடைந்த கணங்களில்
தவறி விழுந்த கண்ணாடியென
நிச்சயம் உடைந்திருக்க கூடும்
சிறுமியின் நுங்கு மனதும்

மழை பொழியும் இன்னேரம்
பட்டாம் பூச்சியென பறந்து சென்று
வௌவாலின் சிறகென கிடக்கும்
குடையை விரித்துப் பார்க்கிறாள்

கடந்த மாரி காலத்தில் பெய்த
இறுதி மழை துளியின் வாசனை
சிறுமியை நனைத்து விடுகிறது.

**- ஜமீல் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி பிறந்தால்

புரட்டாதி மாதமும் பிறந்தது
பொங்கியே கச்சானும் எழுந்தது
வரட்டு இருமலும் காச்சலும் - ஊரில்
வழமைக்கு மாறாக இருக்குது.

வானம் இடைக்கிடை கறுக்குது
வராமலலே மழை பயந்தோடுது
கானம் இசைத்துமே குயில்களும்
காதல் கதைகளை சொல்லுது.

கச்சானும் வேகமாய் வீசுது - மர
கந்தெல்லாம் முறிந்து பறக்குது
உச்சியில் வானம் முழங்குது - மேகம்
ஓடியோடிப் புதினம் காட்டுது.

ஊடலைக் காற்றுமே கூட்டுது
உள்ளமும் கனவில் மிதக்குது
ஆடும் மயிலாய் தோகை விரித்து
ஆரணங் கெல்லாம் சிரிக்குது.

கலையுது காற்றில் மேலாடை
கன்னிகள் காணுது பூவாடை
இலைமறை காயாய் விசேடம் நடந்து
இளையவர் காணுது பாலாடை.

- **அலியார்** T.O.
சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய உலகம்

வளர்ந்த தென்னை மரங்களை வெட்டி
வாசல் இல்லாமல் வீடுகள் கட்டி
உழவுத் தொழிலை அடியோடு மறந்து
உலகில் மனிதன் விலங்காகி வாழ்வான்.

அதிகாரம் என்னும் மமதையில் மிதந்து
ஆண்டு முழுதும் சண்டைகள் செய்து
புதிது புதிதாய் ஆயுதம் கண்டு
புரட்சி செய்வானே மரணத்தை மறந்து .
சந்திக்கு சந்தி மதுக்கடை கூடும்
சமையல் மறந்து பெண்களும் வாழும்
உண்ணும் உணவில் போசனை குறைந்து
ஒவ்வாமை நோயால் வாடுவான் மனிதன்.

மாதர்கள் அணியும் ஆடையும் குறையும்
மனித விழுமியம் இல்லாமல் மறையும்
சாதிக் கலவரம் புதுப்புது வடிவில்
தலைவிரித்து மனித நிம்மதி குறையும்.

போதைக்கு ஆண்கள் அடிமையாய் மாறி
பெண்களும் அதற்கு துணையாகி ஊறி
நீதியும் நேர்மையும் கடைப் பொருளாகி
நிம்மதி இழக்கும் நாளைய உலகம்.

ஓட்டைக் குடத்தில் ஊற்றிய நீர்போல்
ஒருநாளும் நிறையா ஆசையில் மிதந்து
மாடாய் உழைத்து பணம் பணமென்று
மனிதனும் செல்வான் விலங்கிலும் கீழாய்.

**- அலியார் T.O.**
சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியா கவிதைகள்

## பயணம்

பயணத்தின் முகம் நெடுகிலும்
மரமும் மனிதர்களும்
ஆக்கிரமிக்க
வழிகின்ற வியர்வையை
மழித்தபடி
பயணம் தொடர்கிறது...

மீதமிருக்கின்ற வாழ்வை
உணர்த்தியபடி
சடசடக்கின்றன -
சாலையோரத்தின்
பொலித்தீன் பைகளும்
மீதக்கழிவுகளும் ...
உறங்கிக் கொண்டிருக்கும்
எதிர்காலத்தின் கதவுகளை
உலுக்கிவிட்டுக் கடக்கிறது -
வாகனத்தினதோ அல்லது
பாதையினதோ ஏதோவொரு
தடவல்

கேட்டுக்கொண்டே இருக்கின்ற
கூச்சல்களின் மத்தியிலும்
கண் மூடியபடி
உறங்கிக்கொண்டே வருகின்றன
உடலின் வெளிப்புறத்தே உள்ள
கண்கள் இரண்டும்.

•••

## நிழல்

ஞாபகங்களை
இருந்த இடத்திலேயே
இருக்க விட்டு
எழும்பி நகர்கிறது நிழல்.

நிழல் நகர்கின்ற
சாலைகளெல்லாம்
ஞாபகங்களின் துர்வாடை
மரண ஞாபகம் என
பின் தொடர்கிறது நிழலை.

வீட்டின் கழிவறையிலும்
படுக்கையின் விரிப்பிலும்
ஞாபகங்களின்
நேரம் நீடிக்கும்...

முடிந்து விடுகின்ற
காலத்தின்
இருட்போர்வைக்குள்
நிழலையும் அறியாமல்
ஞாபகம்
அழுது கொண்டேயிருக்கிறது.

**- "இது நதியின் நாள்"**
**கவிதைத் தொகுப்பிலிருந்து.**
**(டிசம்பர் 2008)**

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனார் கவிதைகள்

## துஷ்பிரயோகம்

எனது குரலை நெரித்துவிட்டு
எனக்காக நீயே பேசி வந்தாய்

எனது பசியை மறுத்துவிட்டு
நீயே புசித்துத் திரிந்தாய்

கஷ்டங்களை நான் சுமக்க
சுகங்களை நீ பெருக்கினாய்

அதற்காகவே
உனது வதை ஆலையில்
என் வாழ்க்கை
சக்கை பிழியப்பட்டு வருகிறது.

என் இனிய வரலாற்றை
ஓலங்களைக் கொண்டு
கண்ணீரைக் கொண்டு
எழுதுவித்தாய்

ஆம்
அடக்கத்தை எனக்கே போதித்தாய்
என்னிடமே எதிர்பார்த்தாய்

உயிருள்ள தோளில்
ஓர் மாலையாகக்
கிடக்க நினைத்தேன்
கடைசியில் என்னை
பிணத்தின் கால்களில்
மலர் வளையமாய்ச்
சார்த்திவிட்டாய்.

• • •

## கோரிக்கை

உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை
என்னை நிர்ப்பந்திக்காதே

உன் மேற்பார்வையின் கீழ்
"வாழ்வை" கோப்புகளாக்கி
(அலுமாரி லாச்சிக்குள்)
பூட்டி வைக்கவும் முடியாது

நான் அதிசயப் புதிரோ
ரகசியப் புதையலோ அல்ல
ஒழித்துப் புதைத்துவிட்டு
பூதமாய் நீ காவல் காக்க

நீ திகட்டி வீசியெறியும்
மிச்சம் மீதியுமல்ல

எனது குரல்
தனித்துமானது
என் ஆற்றலும் சிந்தனையும்
உறுதியானவை

திருத்தச் சட்டங்களாலும்
புதிய ஏற்பாடுகளாலும்
வேலிகளை விசாலப்படுத்தாமல்
விலகி நில்.

**-"ஓவியம் வரையாத தூரிகை" கவிதைத் தொகுப்பிலிருந்து. (ஜனவரி 2004)**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் சுமையல்ல

ஏறூர் கே. நௌஷாத்

முதியோர் அறிவின் பொக்கிசமாம் - அவர்
மூப்பின் அடையாளம் நரைதிரையாம்!
அதிகம் அனுபவம் பெற்றவராம் - எமது
அகிலம் போற்றிடத் தக்கவராம்!

உலகம் உய்வது அவர்வழியில் - நல்ல
உழைப்பும் முயற்சியும் அவர்தயவாம்!
கலகம் இல்லா நாட்டினையே - அன்று
கண்டார் அவரவர் வாழ்க்கையிலே!

நாளைய சந்ததி தழைத்தோங்க - நல்ல
மரங்களை நட்டார் விளைத்தோங்க!
காலையும் மாலையும் நீர் விட்டார் - வரும்
காலத்தின் சந்ததிக்கு சோறிட்டார் !

காலம் கிழித்த கோடுகளே - அவர்
கால்கை முகத்தின் ரேகைகளே!
சாலச் சிறந்த பணியாற்றி - இன்று
சாய்வு நாற்காலி சுமையேற்றார்!

அனாதை இல்லங்கள் அரவணைப்பு - பெற்ற
பிள்ளைகள் கழித்ததில் பரிதவிப்பு!
மனதை உருக்கும் செய்கைகளாம் - இனி
மறுத்தே ஒழிப்போம் இந்நிலையை!

தென்னையின் கீற்று விழுந்தால் தான் - நம் முன்
தெரியும் உயர்ந்த வளர்ச்சியும் தான்!
பொன்னையும் சுட்டு நகையாக்கி - புடம்
போடும் வயோதிபர் பெருமையது!

வயோதிபர் வாழ்க்கையின் வழிகாட்டி - அவர்
வார்த்தைகள் ஒவ்வொன்றும் திசைகாட்டி
கதியே என்று அடியேற்று - நாம்
கண்ணியம் காட்டணும் மொழியேற்று!

முதியோர் எமக்கு சுமையில்லை - நிஜம்
முதுமை என்பது வரமாகும்!
நிதிகள் பொருட்கள் நிலையில்லை - அவர்
நீடித்து வாழும் சொத்தாகும்.

**-"மௌனத்தின் சத்தங்கள்" கவிதைத் தொகுப்பிலிருந்து. (பெப்ரவரி 2015)**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகள்

## இரண்டு ரூபா

பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு
முன்னால் போ என்று துரத்தினாய்
எட்டு ரூபாவுக்கான
பயணச் சீட்டைத் தந்து விட்டு

இரண்டு ரூபாய்க்காக
வாய்திறக்க முற்பட்டால்
நெருக்குப்பட மட்டுமல்ல
என்னை
நிர்வாணப்படுத்தி விடவும் கூடும்
நீ

தருமதிக்கு முயற்சித்தால்
கெடுமதி விளைந்து விடுகிறது
அவ்வப்போது

பஸ்ஸில் ஏறிய பிறகுதான்
சில்லறை பற்றிய ஞாபகம் வருகிறது
"சில்லறைகள்" நிறைந்த நாட்டில்

"நாணயம்" இல்லாத உலகில்
இரண்டு ரூபா ஒன்றும்
பெரிய நாணயம் இல்லைதான்!

ஆனாலும்
தவிர்க்க முடியுதில்லை -

நீ திருப்பித் தராத பணத்தில்
தன் குழந்தைகளுக்கு
இரண்டு டொபிகளையேனும்
வாங்க எண்ணும்
ஓர் ஏழைத் தந்தையின் தவிப்பு
நினைவில் வருவதை!

•••

## கதவு

உங்கள் வருகைக்காய்த்
திறந்து வைக்கப்பட்ட கதவு
நீங்கள் வந்தவேளை
சாத்தப்பட்டிருந்தது கண்டு
திரும்பியதறிந்தேன்

திறக்கவும் மூடவும்
இன்னும்
பாதுகாப்புக்குமானவை
கதவுகள் என்பதை
நீங்கள் உணர மறுத்தது
உறுத்துகின்றதெனக்கு

குரல் வழங்கப்பட்டிருப்பது
கூப்பிடுவதற்கும்
கைகள் தரப்பட்டிருப்பது
தட்டிப் பார்ப்பதற்கும்தான்

உள்ளே தாழிடப்பட்ட
தட்டினால் திறக்கப்படாத
கதவுகளேதும்
உலகத்தில் கிடையாது!

**"தேவதைகள் போகும் தெரு"**
**கவிதைத் தொகுப்பிலிருந்து.**
**(ஆகஸ்ட் 2018)**

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பியக்கோ கவிதைகள்

## தன்மானம்

தன்மானம் பெரிதென்றே எண்ணு
தீங்குவரின் வெலமுயற்சி பண்ணு
மன்னுலகில் வாழுமட்டும்
மாற்றார்பால் கேடுவர
ஒண்ணாதே நல்வழியை நண்ணு!

இழந்தாலோ மீண்டுவரா மானம்
இழந்துவிடின் குலத்துக்கே ஈனம்
அழிந்துவிடின் அழிந்ததுதான்
அழுதாலும் மீளாதே
முழுதும்நம் வாழ்விலதால் ஊனம்!

வாழ்ந்தென்ன பயனுண்டோ வாழ்வே
வீழவரும் நிலைதானே தாழ்வே
வாழ்வதுவோ சிலகாலம்
வரலாற்றில் இழிவுவரின்
வழிதொடரும் சந்ததிக்குந் தாழ்வே!

## சூழ்ச்சி

எத்தனைதான் சூழ்ச்சிசெய்த போழ்தும்
இறைகையில் இருக்கிறது நீதம்
எத்தனித்தே பழிதீர்க்க
இடையிறுக்கி நிற்பவர்கள்
சக்தியறும் ஓடிடும்பல் காதம்!

சூழ்ச்சியினைச் சூழ்ச்சியொன்றே வெல்லும்
சூதுவாது நல்வினையைக் கொல்லும்
வாழ்பவரைத் தோற்கடிக்க
வழிதவறி நாடுவதேன்
வீழ்ச்சிவரும் தெய்வநீதி சொல்லும்!

மற்றவர்க்குத் தோண்டுகின்ற குழியில்
மாறிவிழ வேண்டிவரும் பழியில்
அற்பகுணம் தனக்குத்தான்
அழிமதியை வினைவிதைத்த
குற்றமது செல்கவேநல் வழியில்!

– காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் –




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிடைக்கப்பெற்ற கவிதைத் தொகுப்புகள்





நூல் : மௌனத்தின் சத்தங்கள்
ஆசிரியர் : ஏரூர் கே. நௌஷாத்
வெளியீடு : நல்லிணக்கம் மற்றும் வலுவூட்டலுக்கான அமைப்பு
பதிப்பு : பெப்ரவரி 2015
பக்கம் : 132 விலை: ரூபா. 200.00




நூல் : தேவதைகள் போகும் தெரு
ஆசிரியர் : அஷ்ர..்ப் சிஹாப்தீன்
வெளியீடு : யாத்ரா
பதிப்பு : ஆகஸ்ட் 2018
பக்கம் : 120
விலை : ரூபா. 350.00




நூல் : ஓவியம் வரையாத தூரிகை
ஆசிரியர் : அனார்
வெளியீடு : மூன்றாவது மனிதன்
பதிப்பு : ஜனவரி 2004
பக்கம் : 54
விலை : ரூபா. 100.00




நூல் : இது நதியின் நாள்
ஆசிரியர் : பெண்ணியா
வெளியீடு : சிறகுநுனி
பதிப்பு : டிசம்பர் 2008
பக்கம் : 78
விலை : ரூபா. 200.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digital Printers & Publishers:

**Digital Information System**

378/2, Zam Zam Road,

Maruthamunai-03 #32314.

Telephone: 067 45 496 45.

இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் ஒக்டோபர் 2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org